நாள் -24.08.2021

O.S.NO.276/2013

வா.சா. 1 (கிருஷ்ணன் ) அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் கு.வி

நான் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். நான் சிவகாசி ஐயம் நாடார் கல்லூரியில் 1973 முதல் 2003 வரை பணிபுரிந்துவந்தேன். அக்காலகட்டத்தில் சிவகாசியில் தான் குடும்பத்துடன் தாமசித்து வந்தேன். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இதற்கு முன் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.814/1988 என்ற வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் ரத்து செய்யகூறி தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி பரிகாரத்தினை நான் கோரவில்லை. ஆகவே மேற்படி பரிகாரம் எனக்கு தேவையில்லை என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.814/1988 என்ற வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்பாணை மேலும் மேல்முறையீட்டில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மற்றும் மாண்பு மிகு உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி வழக்குகளில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான், தற்போது இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் மட்டுமே கிடைத்தால் போதுமானது. ஆனால் அ.வ.எண்.814/1988 மற்றும் அதன் மேல்முறையீடு மற்றும் உயர் நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை நகல்களை இவ்வழக்கில் வா.சா.ஆ-40, வா.சா.ஆ-41, வா.சா.ஆ- 42 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.814/1988 வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றாலும் அதன்மேல் மேல்முறையீடு செய்யப்பட்ட மாண்பு மிகு உயர் நீதிமன்றத்தில் இரண்டாம் மேல்முறையீட எண் 535/2003 தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது

என்றால்அதுபற்றி எனக்கு தெரியாது. மேல்முறையீடு எண்.535/2003 என்ற வழக்கில் பிறப்பித்த தீா்ப்பின் நீதிமன்ற நகலை நாங்கள் பெற்றோம் அதனை நான் படித்து பாா்க்கவில்லை. மேற்படி S.A.No.535/2003 ல் பிறப்பித்த தீா்ப்பாணை என்னை கட்டுப்படுத்தாது என்ற காரணத்தினால் நான் அதனை படித்து பாா்க்கவில்லை. மேற்படி S.A.No.535/2003 உடன் உயா்நீதிமன்றத்தில் அதனுடன் 4 நீதி பேராண்மை மனுக்களும் சோ்த்து முடிவு செய்யப்பட்டது என்றாலும், அதனை நான் படித்து பாா்க்கவில்லை. எங்கள் ஊரில் ஜான்சன் மற்றும் அலோகியஸ் என்ற நபா்கள் கிடையாது. என்னுடைய ஊா் என்பது அரசன் விளை என்பதை தான் குறிப்பிடுகிறேன். எனக்கு ஆங்கிலம் ஓரளவிற்கு படிக்க தெரியும். என்னிடம் காட்டப்படும் என்னுடைய வாதுரையில் அ.வ.எண்.814/1988 வழக்கில் பிறப்பித்த தீா்ப்பு மற்றும் தீா்ப்பாணை எங்களை கட்டுபடுத்தாது என்ற பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் இடுவேன் என்றால் சரிதான். என்னுடைய வாதுரையில் பிரதிவாதிகளும் மேலும் அரசு அதிகாரிகளும் கூட்டாக சோ்ந்து தான் வழக்கு தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்குகளில் அ.வ.எண்.814/1988ல் அரசாங்கம் கட்சி சோ்க்கப்படவில்லை , ஆனால் மாவட்ட ஆட்சி தலைவா் கட்சி சோ்க்கப்பட்டுள்ளாா் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சி தலைவா் அரசாங்கத்தின் மாவட்ட பிரதிநிதி என்றால் சரிதான். பஞ்சாயத்தில் போடப்படும் ஆணைகளை பஞ்சாயத்து ஆய்வாளா் என்ற முறையில் மாவட்ட ஆட்சி தலைவா் தான் மேற்பாா்வையிடுவாா் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அரசாங்கத்தின் மாவட்ட ஆட்சி மற்றும் , வரிவசூலிப்பது ஆகியவை மாவட்ட ஆட்சி தலைவா் பொறுப்பு தான் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. அ.வ.எண்.814/1988ல் வழக்கில் மேலசங்கரன் குழி கிராம பஞ்சாயத்தின் தலைவரை கட்சி சோ்த்துள்ளோம் என்றால் முதலில் செயல் அலுவலரையும் பின்னா் தான் பஞ்சாத்து

தலைவரை கட்சி சேர்த்தோம். இவ்வழக்கினை தாக்கல் செய்ய ஊர் பரசியம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.814/1988ல் வழக்கு தாக்கல் செய்யும்போதும் ஊர் பரசியம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பரசியம் போடப்பட்டது என்ற விபரத்தினை S.A.No.535/2003 என்ற வழக்கில் பிறப்பித்த தீர்ப்பின் பத்தி 13ல் கூறுப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சம்பந்தமான பிரச்சனைகள் அனைத்தும் புல எண் 7 சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். நான் என்னுடைய ஊர் என்று குறிப்பிடும் அரசன் விளையும் புல எண்7ல் தான் வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கின் 2ம் வாதி வேலுதாஸ் என்னுடைய ஊரை சார்ந்தவர்கள் தான். மற்ற 2 வாதிகளும் சூரபள்ளம் ஊரினை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி சூரப்பள்ளம் ஊரினை சார்ந்த வாதிகள் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள் என்றால் சரிதான். அரசன்வடிவிளை பகுதியை சார்ந்த எந்த நபர்களும் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். மேற்படி அரசன்வடிவிளை பகுதியை சார்ந்த நபர்கள் யாரும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அரசன்வடிவிளை ஊர் சார்பாக நான் இவ்வழக்கை தாக்கல் செய்ய ஏதேனும் அதிகாரம் பெற்ற ஆவணம் இந்நீதிமன்றதில் தாக்கல் செய்தள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அரசன்வடிவிளை ஊருக்கான ஊர் கமிட்டி உள்ளது அதற்கு நான் தான் தலைவர். மேற்படி ஊர் கமிட்டியிலிருந்து அரசன்வடிவிளை ஊரை சார்பாக வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2வது வாதியும் அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். S.A.No.535/2003 என்ற வழக்கில் மாண்பு மிகு உயர்நீதிமன்றமானது மாவட்ட ஆட்சியரிமிருந்து அறிக்கை கோரப்பட்டு அது மேற்படி வழக்கில் கூறப்பட்டுள்ளது என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி விபரம் தெரியும் என்றாலும் , ஆனால் இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அரசன்விளை என்ற ஊர்

அரசன்விளை என்று" தான் 100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து அழைக்கப்பட்டுள்ளது என்று என்னுடை வாதுரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் 100 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளது என்பதிகை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் 50,60 ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேன். அரசன் விளை என்ற ஊரில் தற்போது மாவட்ட ஆட்சி தலைவரால் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். வங்கிபெயர் பல்கையிலும் அரசன் விளை என்று மாற்றப்பட்டு பேயோடு என்று தான் உள்ளது என்றால் சரிதான். அரசன் விளை என்ற பெயர் காலம் குறித்து விபரங்களை என்னுடைய வாதுரையில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அதற்கான வரலாற்று ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஆவணம் எதுவும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அரசன் விளை பெயர் காரணத்திற்கான கூறிய விபரங்கள் அனைத்தும் ஆதாரமற்றது என்றாலும் , இவ்வழக்கிற்காக கூறப்பட்டது என்றாலும் சரியல்ல. தற்போதும் வாதுரையில் குறிப்பிட்டுள்ள பழமையான ஆலுமரம் உள்ளது. ஓகி புயல் காரணமாக ஒரு மரம் விழுந்துவிட்டது. தற்போதும் அம்மரமானது தேசிய நெடுஞ்சாலை புறம்போக்கில் உள்ளது. மேற்படி மரமும் இல்லை என்றாலும், மேற்படி விபரம் அனைத்தும் பொய்யாக கூறப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அரசருக்கு அங்கு எந்த விளையும் கிடையாது என்றால் சரிதான். எங்கள் ஊரில் அரச குடும்பத்தினை சார்ந்த நபர்கள் யாரும் கிடையாது. இம்மாவட்டத்தில் உள்ள நான்கு தாலுகாகளும் திருவாங்கூர் சமஸ்தான காலகட்டத்தில் உண்டு என்றால் சரிதான். திருவாங்கூர் சமஸ்தானத்தின் காலத்திலும் தாலுகா அதிகாரிகளும், மற்றும் கிராம நிர்வாக அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர் என்றால் சரிதான். ஆகவே திருவாங்கூர் சமஸ்தானகால கட்டித்திலேயே அரசன்விளை என்ற ஊர் இருந்தது என்று காண்பிக்க ஆவணம் எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் குறிப்பிடும் ஐங்சனிலிருந்து

வலதுபுறமாக சென்றால் சரல் என்ற ஊர் வரு'ம் என்றால் சரிதான். நேராக சென்றால் வெள்ளி சந்தை குளச்சல் ஊர் செல்லும் இடதுபுறம் சென்றால் இராஜாக்கமங்கலம் செல்லும் நேராக பேயோடு முடிந்து நிற்கும் ஐங்சன் தான் நான் குறிப்பிடும் என்றால் சரிதான். மேற்படி ஐங்சனிற்கு கிழக்கு பக்கம் பேயோடு உள்ளது என்று என்னுடைய வாதுரையில் குறிப்பிடடுள்ளோம் என்றால் சரிதான். தற்போது மேற்படி சாலை சந்திப்பு சுற்றியுள்ள பகுதிகள் அனைத்தும் போயோடு என்று தான் குறிப்பிடப்படுகிறது என்றால் சரியல்ல அவ்வாறு பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பெயர் பலகை பஞ்சாயத்தினால் தான் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தனிநபர்கள் வைத்துள்ளார்கள். தனிநபர்களும் அச்சாலை சந்திப்பினை சுற்றி கடை வந்துள்ள நபர்களும் தான் பேயோடு என்று பெயர் பலகை எழுதி வைத்துள்ளனர். மேற்படி பேயோடு பகுதியை தான் அரசன்விளை என்று குறிப்பிட பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த காலகட்டத்தில் கேரளாவினை சார்ந்த பகுதிகள் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் 1956 கால கட்டத்தில் தான் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்து பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாடுடன் மேற்படி பகுதிகள் இணைப்பதற்கு முன்பு ஊரின் பெயர் குறித்த ஆவணம் நான் படித்து பார்க்கவில்லை என்றால்சரிதான். எந்தெந்த பகுதிகள் ஊர்கள் தமிழ்நாடுடன் இணைக்க்பட்டது என்ற பட்டியல் வெளியிட்டது என்றால் சரிதான். அப் பட்டியலை நான் பார்த்ததில்லை. இவ்வழக்கின் வழக்கு குறித்த பகுதிகள் அனைத்தும் வேம்பனூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அப்பகுதியில் எந்தெந்த புல எண் கொண்ட நிலம் உள்ளது என்பதை அப்பகுதியில் உள்ள வருவாய் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலை சந்திப்பிலிருந்து வடக்குபக்கம் சென்றால் சிறிது தூரத்தில் வெள்ளிசந்தை பஞ்சாயத்து வரும் என்றால் சரிதான். அதுபோன்று நேராக மேற்கு பக்கம் சென்றாலும் வெள்ளிசந்தை

பங்சாத்து வரும் என்றால் சரிதான். அதுபோன்று இடது கை பக்கம் இராஜாக்கமங்கலம் பகுதியில் சென்றால் கணபதிபும் வரும் என்றால் சரிதான். கணபதிபுரம் நீண்டகரை பி கிராம் என்றால் சரிதான். வழக்கு பகுதியானது மேற்படி 3 பஞ்சாயத்துகளுக்கும் உட்பட்ட மேற்படி சாலை சந்திப்பு தான் வழக்கு பகுதி என்றால் சரிதான்.. பொதுவாக அனைத்து பஞ்சாத்திற்கும் வரையறுக்கப்பட்ட எல்கை உண்டு என்றால் சரிதான். பொதுவாக பிளாக் அடிப்படையில் தான் வரி விதிக்கப்படும்எ ன்றால் சரிதான். மேலும் நகராட்சியில் வார்டுகளின்அடிப்படையில் வரி வசூலிக்கப்படும் என்றால்சரிதான். வழக்கு பகுதியில் உள்ள சொத்துகளுக்கான வரி மேலசங்கரனகுழி பஞ்சாயத்தில் தான் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி மேலசங்கரன்குழி பஞ்சாயத்தில் எத்தனை ஊர்கள் உள்ளது என்ற விபரத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுள்ளேன் என்றால் நியாபகம் இல்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கிராமங்களின் விபரம் குறித்து எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை எந்த ஆவணமும் பெறப்படவில்லை. மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகம் மற்றும் வருவாய் அலுவலங்களில் பராரிக்கப்பட்ட கிராமம் மற்றும் குக்கிராமம் பற்றிய விபரங்களில் அரசன்விளை ஊர் இல்லை ஏ்ன்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, மேற்படி ஆவணத்தினை நான் பார்க்கவில்லை. தமிழ்நாடு Survey and Boundary சடத்தினை நான் படித்து பார்த்தது கிடையாது. 1975ம் ஆண்டு குமரி மாவட்டம் முழுவதும் மறு அளைவை செய்யப்பட்டு அதன் விபரங்கள் அரசாணையில் வெளியிடப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு மறு அளவை செய்யப்பட்ட விபரம் குறித்து எனக்கு தெரியாது. 1975ம் ஆண்டு ஒவ்பொரு புல எண்ணாக சென்று அதனை அளந்து பார்த்து திட்டப்படுத்தி அதனை முடிவு செய்து தான் அரசு வெளியிட்டது என்றால் சரிதான். 1975ல் மேற்படி அரசாணை வெளியிட்ட பின்பு அதற்கு முன்பு செய்யப்பட்ட அளவைகள் முடிவிற்கு வந்தது என்றால் சரிதான். தமிழ்நாடு Survey and Boundary

சட்டத்தின் படி நிலஅளை துறை அதிகரிகளுக்கு கிராமத்தில் பெயர் குறித்த அதிகாரம் கிடையாது என்றால்சரியல்ல. நிலஅளவை துறை அதிகாரிகள் மறு அளவை எண் கொண்ட நிலங்களை அளந்து திட்டப்படுத்தி மறு அளவை எண் வழங்குவார்கள் என்றால் சரிதான். சூரப்பள்ளத்தின் வடக்கு பகுதி வேம்பனூர் வருவாய் கிராமத்தின் கீழ்வரும் என்றால் சரிதான் நான் குறிப்பிடும் பகுதியானது மேலசங்கரன் குழி பங்சாயத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.814/1988 வழக்கு தாக்கல் செய்த கால கட்டத்தில் நான் சிவகாசியில் நிரந்தரமாக தாமசித்து வந்தேன் என்றால் சரிதான். ஆகவே 1988ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது பிளாக் எண்.7 சம்பந்தப்பட்டது கிடையாது என்றால்சரியல்ல அதன் கிழக்கில் ஒரு பகுதி மட்டும் தான். மேற்படி தமிழ்நாடு Survey and Boundary சட்டமானது கிராமத்தின் பெயர்களை நிர்ணயம் செய்யாது என்று உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் பிளாக் எண்.7ல் சாந்தபுரம் என்ற ஊர் கிடையாது, மற்றும் சாந்தபுரம் , அரசன்விளை ஊர் வராது என்றும் பேயோடு என்ற ஊர்மட்டுமே வரும் என்று கூறப்பட்டுது என்றாலும். மேற்படி தீர்ப்பின் மேல் மேல்முறையீடு கிடையாது என்று கூறப்பட்டுள்ளது என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆகவே உயர்நீதிமன்றத்தில் இரண்டாம் மேல் முறையீட்டில் கூறப்பட்டுள்ள தீழ்ப்பானது பிளாக் எண்7 உள்ள அனைவரையும் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பொதுவாக பரசியம் செய்வதற்கு செய்திதாளில் மட்டுமே வெளியிடப்பட்டது என்றாலும், தமக்கு அடிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. செய்திதாளில் வெளியிடப்படுவது ஊரில் உள்ள அனைவருக்கும் வழக்கு சம்பந்தமான வழக்கு நிலுவையில்உ ள்ள விபரத்தனை தெரியப்படுத்தவும், மேலும் இவ்வழக்கில் கட்சி சேர்ப்பதற்கு தான் வெளியிடப்படுகிறது என்றால் சரிதான். அ.வ.எண்.814/1988 வழக்கில் பொதுவாக பரசியம் செய்தன் அடிப்படையில் நான் குறிப்பிடும் அரசன்விளை

கிராமத்தலிருந்து யாரும்அவ்வழக்கில் கட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் ஓய்வு பெற்ற பின்பு தான் 2013ல் வழக்கை தாக்கல் செய்தேன். அவ.எண்.814/1988ல் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையிடு மற்றும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அ.வ்எண்.814/1988 வழக்கில் என்னுடைய ஊரினை சார்ந்த ஜான்சன் என்ற நபர் எதிர்த்து வழக்கு தாக்கல் செய்தார்எ ன்றால் சரியல்ல அவர் எங்கள் ஊரை சார்ந்தவர் அல்ல. மேற்படி ஜான்சன் உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் தாக்கல் செய்திருக்கலாம் அதுபற்றி எனக்கு தெரியாது. மேலும் அருணாசலம் என்பவர் W.P.No.14722 மனுவினை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, W.P.No.11610/2010 பெல்மான்தம்பி என்ற நபரும் நீதிபேராண்மை மனுவினை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி ஜான்சன், அருணாசலம் மற்றும் பெல்மான்தம்பி நபர்கள் தாக்கல் செய்த தீர்ப்புக்ள அனைத்திற்கும் S.A.No.535/2003 மனுவில் சேர்த்து தீர்பு பகரப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி ஆவணம் அனைத்தும் பிரதிவாதிகளால் 2014ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தினை நான் நீதிமன்ற சான்றிட்ட நகல் பெற்று நான் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதியின் ஆவணங்கள் 2014ம் ஆண்டிலேயே என்னுடைய வழக்கறிஞருக்கு நகல்களை கொடுக்கப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுக்கள் மீது தமிழக அரசு கட்சி சேர்க்கப்பட்டு அதன் செயலாளர் காரணமாக பிரதிநிதிதுவம் செய்த அதன்படிதான் தீர்ப்பு வழங்கப்பட்டதுஎ ன்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுக்களில் மாவட்ட ஆட்சிதலைவர் கிராமத்திற்கு சென்று பார்வையிட்டு அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியாது. அச்சமயத்தில் அறிக்கை தாக்கல் செய்த ககன் தீப்சிங்

பேடி என்ற மாவட்ட ஆட்சியரை எனக்கு தெரியும். அச்சமயத்தில் மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்தோம் ஆனால்அவரின்பெயர் எனக்கு தெரியாது. அந்த மனுவானது 2012ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சி தலைவருக்கு மனு மட்டும் கொடுக்கப்பட்டது ஆவணம் கிடையாது. நானும் ஜான்சன் என்ற நபரும் சேர்ந்து தான் மனு கொடுத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஜான்சன் என்ன பணி புரிகிறார் என்றால் தெ தரியாது. மாவட்ட ஆட்சி தலைவர் உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்ப அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.814/1988 மற்றும் அதன் முதல் மேல்முறையீட்டில் பிறப்பித்த தீர்ப்பு மட்டும் தாக்கல் செய்ய்பபட்டுள்ளது என்றாலும். மேலும் S.A.No.535/2003 ல் உள்ள தீர்ப்பின் நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தேவையில்லை என்பதினால் தான் மேற்படி தீர்ப்பினை நான் தாக்கல் செய்யவில்லை. S.A.No.535/2003 வழகில் பிறப்பித்த தீர்ப்பின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் வழக்கின் விபரம் இந்நீதிமன்றத்திற்கும் தெரியவந்துவிடும் என்ற காரணத்தினால் தான் நகல் எடுக்கப்பட்டும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

வேண்டுகோளுக்கிணங்க கு.வி தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.